# நவநாள் கருத்துக்கள்

| நாள் | கருத்து | நமது வேர்களில் ஊன்றி | நற்செயல் |
|---|---|---|---|
| **04.08.2021 புதன்** | நமது தாய் திருச்சபையை இறைவன் ஆசீர்வதிக்கவும், திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர், இறை மக்கள் சான்று பகரும் வாழ்வு வாழவும் செபிப்போம். | ஆழ்ந்த இறைப்பற்றில் வளர செபிப்போம். | ஒரு மணி நேரம் நற்கருணை ஆண்டவர்முன் மண்டியிடுவோம். |
| **05.08.2021 வியாழன்** | உலகின் இன்றைய அசாதாரணச் சூழல்கள் முடிவுக்கு வரவும், நோய், தனிமை, போர், அச்சத்திலிருந்து உலகம் காக்கப்படவும், உலகில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவவும் செபிப்போம். | இறைபராமரிப்பில் அசையாத நம்பிக்கை கொள்வோம். | அவநம்பிக்கையில் இருக்கின்ற ஒருவருக்கு இன்று நம்பிக்கை கொடுப்போம். |
| **06.08.2021 வெள்ளி** | நம் சபைக்காக செபிப்போம். சபை உறுப்பினர்கள் அர்ப்பணத்தில் ஆழம் பெறவும், இறையழைத்தல் பெருகவும், உருவாக்கப் பயிற்சியில் உள்ள உருவாகிகள் மற்றும் அவர்களை உருவாக்கும் உருவாக்குனர்கள் ஆவி யால் வழிநடத்தப்படவும் வேண்டுவோம். | மனதில் எளிமையை வளர்ப்போம். | இன்றைய நாள் முழுவதும் முக மலர்ச்சியுடன் இனிமையாகப் பேசுவோம். |
| **07.08.2021 சனி** | நம் சபையில், குடும்பங்களில், நமது மருத்துவ சேவை மையங்களில் உள்ள நோயாளிகள் முழுநலம் பெறவும், மருத்துவ பணியாற்றும் மருத்துவர், தாதியர், துணை மருத்துவப்பணிச் சகோதரிகள் அனைத்து ஆசீர்வாதங் களும் பெறவும் இத்தருணத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் அனைத்து நோயாளிகளுக்காகவும் உருக்கமாகச் செபிப்போம். | மகிழ்ச்சியுடன் விரும்பி ஏழ்மையை ஏற்போம். | நம்மிடமுள்ள ஏதாவது ஒரு பொருளை ஏழை ஒருவருக்குக் கொடுப்போம். |

| | | | |
|---|---|---|---|
| **08.08.2021 ஞாயிறு** | மறைபரப்புத் தளங்களில் பணியாற்றும் அனைவருக்காகவும் குறிப்பாக நம் சபையில் வட இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் பணிபுரியும் நம் சகோதரி களுக்காகவும், அவர்கள் எல்லா நலன் களும் பெற்று உடல், உள்ள ஆரோக்கியத்தோடு பணி புரியவும் செபிப்போம். | நம் சகோதர சகோதரிகளுடன் அன்பில் வளர்வோம். | இன்று முழுவதும் யாரைப்பற்றியும் எதைப்பற்றியும் குறைகூறாமல் எப்போதும் நேர்மறையாகவே பேசுவோம். |
| **09.08.2021 திங்கள்** | நமது கல்வி நிறுவனங்களில் பயிலும் குழந்தைகள், பெண்கள், ஆசிரியப் பெரு மக்கள், பெற்றோர் மற்றும் உபகாரிகள் ஆகியோரின் உடல், உள்ள தேவைகள் நிறைவேறவும், கல்விப் பணியாற்றும் நம் சகோதரிகள் தனிவரத்தின் பாதையில் வழிநடக்கவும் மன்றாடுவோம். நமது கல்வி நிறுவனங்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப செபிப்போம். | உடல் உழைப்பின் மதிப்பை அதிகப் படுத்துவோம். | நம்மால் முடிந்த உடல் உழைப்பில் இன்று ஈடுபடுவோம். பொதுவேலை தோட்டவேலை போன்றவற்றில் ஈடுபடலாம். |
| **10.08.2021 செவ்வாய்** | அனாதைகள், நம் அடைக்கலச் செல்வங்கள் மற்றும் நம் கருணைக் குடில் இல்லங்களில் வாழும் குழந்தைகளின் நல்வாழ்வுக்காகவும், இவர்களைக் கண் காணிக்கும் அருட்சகோதரிகளின் நலனுக் காகவும், பல்வேறு தேவைகளுக்காக நம்மிடம் செபிக்கக் கேட்டுக் கொண்ட அனைவரின் தேவைகள் நிறைவேறவும் அருள் வேண்டுவோம். | அடைக்கலம் ஏதுமில்லா அபலைகளுக்கு அடைக்கலம் தருவோம். | இன்று அனாதைகள், கைவிடப்பட்டவர் யாராவது ஒருவருக்கு ஆறுதல்கூறி அன்பாகத் தேற்றி நம் Pocket Money – யிலிருந்து சிறிய உதவி செய்வோம். |

| | | | |
|---|---|---|---|
| **11.08.2021 புதன்** | மக்கள் சேவையில், சிறைப்பணியில், மக்கள் விடுதலையில், சமுதாயப்பணியில் தன்னைக் கரைத்துக் கொள்ளும் சகோதரிகளுக்காகவும், அப்பணித்தளங் களில் பயன்பெறும் மகளிர் குழுக்கள், குழந்தைத் தொழிலாளர்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், சிறையில் வாடும் கைதிகள் அவர்களின் குடும்பங்களுக் காகவும் செபிப்போம். | உலகம் தழுவிய சகோதரத்துவத்தை நமதாக்குவோம். | ஏதாவதொரு காரணத்திற்காக நம்மால் விரும்பப்படாத ஒருவருக்கு வலிய சென்று உதவுவோம். |
| **12.08.2021 வியாழன்** | நம் வாழ்வில் பெற்றுக் கொண்ட அனைத்து நன்மைகளுக்கும் நன்றி சொல்லுவோம். நம் வளர்ச்சிக்குத் தியாகம் செய்த பெற்றோர், உற்றார், உறவினர், வழிகாட்டிய ஆசான்கள், பெரியோர்கள், உடன் பயணித்த நண்பர்கள், நலம் விரும்பிகள் அனை வரும் இறைவனின் ஆசீர்வாதங்களால் நிரப்பப்பட செபிப்போம். | இறைவனுக்கு ‘ஆம்’என்று சொன்ன அடைக்கல அன்னையின் மனநிலையை நமதாக்குவோம். | நாம் பெற்றுக்கொண்ட 100 நன்மைகளுக்காக இன்று நன்றி சொல் வோம். நேரம் கிடைத்தால் தாளில் எழுதி நன்றி சொல் வோம். |
| **13.08.2021 வெள்ளி** | நம் சபையின் அனைத்து சகோதரிகளும் அடைக்கலத் தாயின் பிள்ளைகள் என்ற ஒற்றுமை உணர்வைப் பெற்றுக் கொள்ளவும், அர்ப்பணவாழ்வில் ஆழம் பெறவும், சபையின் மைய, மாநில நிர்வாகக் குழுவினர் திருத்தந்தை பிரான்சிஸ் காட்டும் வழியில் பணியாற்றவும் இறைவனை இறைஞ்சு வோம். | படைப்புகள் அனைத்தின் மீதும் அன்பு கொள்வோம். | இன்று இந்தப்பிரபஞ்சம் மனிதர்கள் அனைவருக்கும் முடிந்தவரை நன்மை செய்வோம். |

HAPPY FEAST